1996 பிப்ரவரி 20]

இருக்கவேண்டும். ஆகவே, அரசால் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலிலே கிருஷ்ணகிரி நகரம் இடம் பெறாத காரணத்தால் இந்தத் திட்டம் தற்போது செயல்படுத்துவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

74—

கிராமங்களை ஊராட்சியில் சேர்த்தல்

** **33802** திரு. ஆர். தங்கராஜ்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் ஒரே இடத்தில் இருக்கின்ற பெரிய கருக்கை, சின்ன கருக்கை ஆகிய இரண்டு கிராமங்களும் வெவ்வேறு ஊராட்சியில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த இரண்டு கிராமங்களையும் ஒரே ஊராட்சியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டி மடம், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரிய கருக்கை மற்றும் சின்னக் கருக்கை ஆகிய இரு கிராமங்கள் இருவேறு ஊராட்சிகளில் அமைந்திருப்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) இவ்விரு கிராமங்களை ஒரே ஊராட்சியில் சேர்க்க தற்போது இயலாது.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரிய கருக்கை மற்றும் சின்னக் கருக்கை ஆகிய இரண்டு கிராமங்களும் அருகே அருகே அமைந்திருக்கின்றன. அதில் பெரிய கருக்கை தனி ஊராட்சியாகவும், சின்னக் கருக்கை அழகாபுரம் ஊராட்சியைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது. சின்னக் கருக்கைக்கும் அழகாபுரத்திறகும் 5 கிலோ மீட்டர் தூரம்

இருக்கிறது. எனவே, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சாதாரணப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கூட மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் அந்த ஊராட்சியைச் சேர்ந்த மக்கள் இந்த இரண்டு கிராமங்களையும் ஒரே ஊராட்சியாக சேர்த்து விட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதன் வாயிலாக இங்கே அந்தக் கோரிக்கையை நான் சொல்லியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலனைச் செய்து பெரிய கருக்கை, சின்னக் கருக்கை ஆகிய இரண்டு கிராமங்களையும் ஒரே ஊராட்சியாக அறிவிப்பதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரிய கருக்கை மற்றும் சின்னக் கருக்கை ஆகிய இரண்டு கிராமங்களும் தனித் தனி வருவாய்க் கிராமங்களைச் சேர்ந்ததாகவும் மேலும் இவை வேறு, வேறு ஊராட்சிகளைச் சேர்ந்ததாகவும் உள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பெரிய கருக்கை கிராமம், பெரியாத்து குறிச்சி வருவாய் கிராமம் பெரிய கருக்கை ஊராட்சியிலும், சின்னக் கருக்கை கிராமம், சிலுவைச் சேரி வருவாய் கிராமம் அழகாபுரம் ஊராட்சியிலும் அமைந்திருக்கின்றன என்று அரசுக் குறிப்பில் தெரிவித்திருக்கிறது. இன்றைக்கு புதிய இந்திய அரசியலமைப்பு 73-வது திருத்த சட்டத்தின்படி, ஒவ்வொரு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றில் அமைகிற தன்மைகள், பிரித்தல், தரம் உயர்த்துதல் போன்ற கருத்துக்களை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் பொறுப்பு ஏற்கும் வரை தள்ளி வைக்கலாம் என்று எங்கள் அரசு ஆணைப் பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் தேர்தல் நடைபெற்று புதிய ஊராட்சி அமைப்புகள் பொறுப்பு ஏற்கும் வரை வினாவில் உள்ள பொருள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஊராட்சிகள் சட்ட விதிகளின் படி ஊராட்சிகளைப் பிரிப்பது சேர்ப்பது போன்ற நிலைமைகள் எல்லாம் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட எதிர்காலத்திலாவது இதுபோன்ற பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்ற கிராமங்கள் எல்லாம் வேறு, வேறு ஊராட்சிகளில்

1996 பிப்ரவரி 20]

இருப்பதை அறிந்து அவற்றை சரி செய்ய வேண்டும். தற்போது திருச்சி மாவட்டம் 3 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பிரிக்கப்பட்டு இருக்கின்ற இந்த நேரத்தில் பல ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பல்வேறு கிராமங்களைப் பொறுத்தவரையில் சட்டமன்றத் தொகுதியில் ஒரு இடத்திலும் ஊராட்சி ஒன்றியத்தில் வேறு நிர்வாகத்திலும் இருக்கின்றன. அதை எல்லாம் கணக்கில் எடுத்து மீண்டும் இது போன்ற நடைமுறைச் சிக்கல்கள் எழாத வண்ணம் செய்வதற்கு அரசு ஆவண செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின்படி பல்வேறு சூழ்நிலைகளை அறிந்து இப்படிப்பட்ட பகுதிகளை எல்லாம் கணக்கில் எடுத்து கண்டுபிடித்து அதை ஒன்றாக சேர்த்தலோ, பிரித்தலோ போன்ற நிலைகளை உருவாக்கியிருக்கிறது. ஆனால், இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள், இந்த 73-வது திருத்த அரசமைப்புச் சட்டம் வருவதற்கு முன்பாக, தமிழ்நாடு ஊராட்சிகள் புதிய சட்டம் வருவதற்கு முன்பாக இந்தக் கோரிக்கையை எழுப்பியிருப்பார்கள் என்று சொன்னால் உடனடியாக அரசு அதைச் செய்து முடித்திருக்க முடியும். இன்றைக்கிருக்கின்ற சூழ்நிலையில், உள்ளாட்சித் தேர்தலுக்காக இட ஒதுக்கீடு போன்ற பல்வேறு நடைமுறைகளை இன்றைக்குச் சட்டத்திலே இயற்றியிருக்கிறோம். அந்தக் காரணத்தினால் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இன்றைக்கு ஏற்கப்படுமாயின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த இட ஒதுக்கீடு சம்பந்தமாகப் பல்வேறு பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான் அரசு உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று, ஊராட்சி அமைப்புகள் பொறுப்பேற்கும் வரை இந்தப் பொருள்கள் தொடர்பாக நடவடிக்கையை எடுக்க முடியாது என்பதை ஆணை மூலமாகப் பிறப்பித்திருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெற்று, ஊராட்சி அமைப்புகள் பொறுப்பேற்றபின் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.